போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரித்து முறையே' மருதுபாண்டியர், ஜீவா, நேசமணி என்ற போக்குவரத்துக் கழகங்கள் ஏப்ரல் 1983-ஆம் ஆண்டும், மற்றும் தீரன் சின்ன மலை போக்குவரத்துக் கழகம் ஏப்ரல் 1985-ஆம் ஆண்டிலும் துவக்கப்பட்டன.

மேலும் பாண்டியன் போக்குவரத்துக் கழத்தை இரண்டாகப் பிரித்து, அண்ணா மாவட்டத்திற்கு என்று திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு, 1–4–1986-லே ராணி மங்கம் மாள் போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்டது. இப்போது அண்ணா போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தர்மபுரியை தலைமையிடமாகக் கொண்டு, அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் 1–4–1987 முதல் 332 பேருந்துகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அண்ணா போக்குவரத்துக் கழகம் 430 பேருந்துகளுடன் இயங்கி வருகிறது.

3. அறிவிப்பு

அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 22-4-1987 ஆம் தேதியன்று மாண்புமிகு நாஞ்சி லார் அவர்கள் உரையாற்றும்போது, நாஞ்சிலார் அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க ஒரு குறிப்பிட்ட சொல்லை மட்டும் நீக்கினேன். மீதி நீக்கப்பட்ட பகுதிகளை நானே நீக்கிவிட்டேன் என்பதைச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

4. கவன ஈர்ப்பு

(அ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நன்னிலம் விவசாயிகளுக்கு நிவாரணம்

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " தஞ்சை மாவட்டத்தில் 1985-ஆம் ஆண்டில் எற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பன்னிரண்டு வட்டங்களில் நன்னிலமும் ஒன்றாகும் என்று அரசு ஏற்றும் அப்பகுதியிலுள்ள குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் இல்லாமல் பல பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது குறித்த" அவரசப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.